நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## 400 செம்மறி ஆடுகளுக்கு தடுப்பூசி

கள்ளக்குறிச்சியை அடுத்த மேல்நாரியப்பனூர் கிராமத்தில் துள்ளுமாரி நோய் பரவாமல் இருக்க 400 செம்மறி ஆடுகளுக்கு கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் வியாழக்கிழமை தடுப்பூசிகள் போடப்பட்டன. மேல்நாரியப்பனூர் கிராமத்தில் சில தினங்களுக்கு முன்பு 11 ஆடுகள் உயிரிழந்தன. இதனால் அக் கிராமத்தினர் ஆடுகளுக்கு நோய் ஏதேனும் தாக்கி இருக்கக்கூடும் என்ற அச்சத்தில் இருந்தனர். தகவல் அறிந்த கால்நடை உதவி இயக்குநர் ராஜேந்திரன் மருத்துவர் ஜெயமாந்தி, கள்ளக்குறிச்சி பிரதம மருத்துவர் ராஜன் உள்ளிட்ட குழுவினர் புதன்கிழமை மேல்நாரியப்பனூர் கிராமத்துக்குச் சென்று ஆடுகளின் ரத்தம், சாணம் உள்ளிட்டவற்றை கொண்டு வந்து பரிசோதனை செய்தனர். பரிசோதனையில் எவ்வித தொற்று நோயும் இல்லை எனத் தெரியவந்தது. மேலும் நோய் பரவாமல் இருக்க கள்ளக்குறிச்சி கால்நடை உதவி இயக்குநர் தலைமையில் மருத்துவக் குழுவினர் ஆடுகளுக்கு தடுப்பூசி போட்டனர். அதனை விழுப்புரம் மண்டல இயக்குநர் க.அழகரன் பார்வையிட்டார்.

## உணவு பதனிடுதல் பயிற்சி: விண்ணப்பங்கள் வரவேற்பு

தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் உணவு பதனிடுதல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் குறித்த இலவசப் பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது. இம்முகாமில் பங்கேற்று பயிற்சி பெற விருப்பமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இப்பயிற்சி முகாம் 6 வாரக் காலத்திற்கு நடைபெறும். இதில் உணவு பதப்படுத்தல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் பயிற்சி மட்டுமல்லாது, சிறு தொழில்களை அமைக்க வழிமுறைகளை விளக்குதல் உள்ளிட்டவை குறித்தும் ஆலோசனைகள் வழங்கப்படும். பயிற்சி பெற்றோருக்கு இறுதியில் அரசு சான்றிதழ்களும் வழங்கப்படும். பயிற்சி பெற்றவர்கள் அரசின் கடனுதவித் திட்டங்கள் மூலம் கடன் பெறவும் வழிவகை செய்யப்படும்.

தகுதிகள்: குறைந்தபட்சம் 12-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 18 முதல் 45 வயதிற்கு உள்பட்ட ஆண்கள், பெண்கள் இதில் பங்கேற்கலாம்.

விண்ணப்பிப்பது எப்படி?

இப்பயிற்சியில் சேர விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களின் பெயர், விலாசம், செல்போன் எண், மற்றும் மின்னஞ்சல் உள்ளிட்ட விவரங்களோடு அடங்கிய விண்ணப்பங்களை இயக்குநர், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், டி.ஐ.கட்டடம், கிண்டி, சென்னை 600032 என்ற முகவரிக்கு அனுப்பலாம். விண்ணப்பத்துடன் கல்வி, ஜாதி மற்றும் வயது, அடையாள சான்றிதழ்களின் நகல்கள், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகியவற்றையும் இணைக்க வேண்டும்.

## தாமிரவருணி பாசனத்துக்காக அணையைத் திறக்கக் கோரி வழக்கு

பாசனத்துக்காக அணைகளில் இருந்து தாமிரவருணி ஆற்று நீரை திறக்க உத்தரவிடுமாறு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனுத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்ட தாமிரவருணி ஆற்று பாதுகாப்பு சங்கத் தலைவர் சி. நயினார் குலசேகரன் தாக்கல் செய்த மனு: ஸ்ரீவைகுண்டம் பகுதியில் வடகால், தென்கால், மருதூர், மேலக்கால், கீழக்கால் பகுதிகளில் ஏப்ரல், மே மாத சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடுவதற்கு 1969-ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டது. 44 ஆண்டுகளாக இந்த நடைமுறைப்படி பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு வருடமும் அணைகளின் நீர் இருப்பை அளவிட்டு அதற்கேற்ப நீர் திறப்பதற்கு பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் அறிக்கையின் பேரில் அரசுக்கு மாவட்ட ஆட்சியர் பரிந்துரை செய்வார். அதன்படி, 3 அணைகளில் இருந்தும் தண்ணீர் திறக்க அரசு உத்தரவிடும்.

இந்த ஆண்டு 8,124 ஏக்கர் பாசனத்துக்கு நீர் திறக்க, செயற்பொறியாளர் அறிக்கை கொடுத்திருந்தார். ஆனால், பாசனத்துக்கு தண்ணீர் திறக்காமல் வேறு காரணங்களுக்காக அணை நீர் திறக்கப்பட்டது. மேலும் பாசனத்துக்கு நீர் திறக்கும் படி அனுப்பிய கோரிக்கைகளையும் மாவட்ட ஆட்சியர் நிராகரித்து விட்டார்.

எனவே அரசாணைப்படி 3 அணைகளில் இருந்தும் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விட உத்தரவிடவேண்டும் என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுவை விசாரித்த நீதிபதிகள் எம். ஜெயச்சந்திரன், எம். வேணுகோபால் ஆகியோர் அடங்கிய அமர்வு, மனுவுக்கு பதிலளிக்குமாறு பொதுப்பணித் துறை முதன்மை செயலர், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர்கள், மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர். மேலும் செப். 16-ஆம் தேதிக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

## வேளாண் பணிகள் தொடக்கம்: திண்டுக்கல், தேனி மாவட்ட விவசாயிகளின் தேவைக்கு 1300 டன் உரம்

திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்ட விவசாயிகளின் பயன்பாட்டுக்கு 1315 டன் உர மூட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

பருவமழை பெய்ய தொடங்கியுள்ள நிலையில், திண்டுக்கல் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வேளாண் பணிகளை விவசாயிகள் தொடங்கி உள்ளனர். இதனை கருத்தில்கொண்டு, மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் கிடைக்கும் வகையில், மாவட்ட வேளாண்மைத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதனடிப்படையில், மத்திய அரசு நிறுவனமான, இந்தியன் பொட்டாஷ் லிமிடெட் (ஐ.பி.எல்) மூலம் 1,115 டன் உர மூட்டைகள் ஏற்கெனவே இறக்குமதி செய்யப்பட்டு, தொப்பம்பட்டி, பழனி, ஆத்தூர், நத்தம், திண்டுக்கல், வத்தலகுண்டு, குஜிலியம்பாறை, ஒட்டன்சத்திரம், ரெட்டியார்சத்திரம் ஆகிய 9 ஒன்றியங்களில் உள்ள தனியார் விற்பனை மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தூத்துக்குடியிலிருந்து 1,315 டன் உர மூட்டைகள் ரயில் மூலம் திண்டுக்கல்லை வந்தடைந்தன. அதில், திண்டுக்கல் மாவட்டத்துக்கு 1000 டன், தேனி மாவட்டத்துக்கு 315 டன் என லாரிகள் மூலம் உர மூட்டைகள் வியாழக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த மூட்டைகள் அனைத்தும் தனியார் மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் மூலம் விநியோகம் செய்யப்பட உள்ளதாக, திண்டுக்கல் மாவட்ட வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) கே. செல்வராஜ் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், 50 கிலோ எடை கொண்ட ஒரு மூட்டை யூரியா - ரூ. 270, டி.ஏ.பி. - ரூ.1,250, காம்ப்ளக்ஸ் - ரூ.900 என விற்பனை செய்யப்படும். மூட்டையில் குறிப்பிட்டுள்ள விலையை விட கூடுதலாக விற்பனை செய்தால், அது பற்றி மாவட்ட வேளாண்மை அலுவலகத்தில் விவசாயிகள் புகார் அளிக்கலாம் என்றார்.

## ஒட்டன்சத்திரம் காய்கறிச் சந்தையில் விலை உயர்வு

கேரள மாநிலத்தில் வரும் திங்கள்கிழமை ஓணம் பண்டிகை கொண்டாடப்படுவதை முன்னிட்டு, ஒட்டன்சத்திரம் காய்கறிச் சந்தையில் காய்கறிகளின் விலை உயர்ந்துள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் தமிழகத்திலேயே மிகப்பெரிய காய்கறிச் சந்தை உள்ளது.

இங்கு, ஒட்டன்சத்திரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து பலவிதமான காய்கறிகள் தினந்தோறும் விற்பனைக்கு வருகின்றன. இங்கிருந்து, கேரளத்துக்கு அதிக அளவில் காய்கறிகள் அனுப்பப்பட்டு வருகின்றன.

இதில், கேரள மக்கள் அதிகம் விரும்பி உண்ணும் காய்கறிகளான வெண்டைக்காய், கத்தரிக்காய், முருங்கைக்காய் ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளது.

ஆண்டிப்பட்டி, தேனி, கம்பம் ஆகிய பகுதிகளில் இருந்து வெண்டைக்காய், கொத்தவரை, கத்தரிக்காய் போன்ற காய்களும் மற்றும் தாராபுரம், திருநெல்வேலி, உடன்குடி ஆகிய பகுதிகளில் இருந்து முருங்கைக்காயும் கொண்டு வரப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன.

இவற்றை, கேரள வியாபாரிகள் அதிக அளவில் கொள்முதல் செய்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு நூற்றுக்கும் மேற்பட்ட லாரிகள் மூலம் காய்கறிகள் கேரளத்துக்கு அனுப்பப்பட்டன. ஆனால், இந்த ஆண்டு அவ்வளவாக காய்கறிகளின் வரத்து குறைவு என்பதால், ஓணம் பண்டிகையும் வரவுள்ள நிலையில், இன்னும் சில நாள்களில் காய்கறிகளின் விலை பல மடங்கு உயரக்கூடும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ. 12 முதல் 14 வரைக்கும், வெண்டைக்காய் கிலோ ரூ. 7 முதல் முதல் 10 வரைக்கும் விற்பனையானது. இந்த நிலையில், வியாழக்கிழமை ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ. 23-க்கும், ஒரு கிலோ வெண்டைக்காய் ரூ. 19-க்கும் விற்பனையானது.

## கொடைக்கானலில் கேரட் விளைச்சல் குறைவு

கொடைக்கானலில் கேரட் விளைச்சல் குறைவானதை அடுத்து, விலை அதிகரித்துள்ளது.

கொடைக்கானலில் செண்பகனூர், அட்டுவம்பட்டி, மாட்டுப்பட்டி, வில்பட்டி, பள்ளங்கி, பூண்டி, கிளாவரை, மன்னவனூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் கேரட் அதிகமாக பயிரிடப்படுகின்றது. நான்கு மாதங்களில் நல்ல விளைச்சல் மற்றும் நல்ல விலையும் கிடைப்பதால், விவசாயிகள் அதிக அளவில் கேரட்டை பயிரிட்டு வருகின்றனர். வழக்கம் போல், இந்த ஆண்டும் பல்வேறு கிராமங்களில் கேரட் பயிரிடப்பட்டது.

ஆனால், கொடைக்கானலில் பருவமழை பொய்த்ததால், விளைச்சல் சற்று குறைந்தது. இருப்பினும், விலை சற்று கூடுதலாகக் கிடைத்ததால், ஓரளவுக்கு விவசாயிகள் நஷ்டத்திலிருந்து தப்பித்தனர்.

தற்போது, கேரளத்தில் ஓணம் பண்டிகை வரவுள்ளதை அடுத்து, கொடைக்கானலில் இருந்து காய்கறிகள் அதிக அளவில் மார்க்கெட்டுக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இதனால், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது.

இது குறித்து, கொடைக்கானல் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது: கேரட்டுக்கு களையெடுத்தல், உரமிடுதல், பூச்சி மருந்து தெளித்தல் என நிறைய பராமரிப்பு தேவைப்படுகிறது. மேலும், இப்பயிருக்கு தண்ணீர் அதிக அளவில் தேவைப்படும். எந்த அளவுக்கு தண்ணீர் விடுகிறோமோ அந்த அளவுக்கு கேரட் நன்கு விளையும். மார்க்கெட்டிலும் நல்ல விலை கிடைக்கும். இதனால், கொடைக்கானல் மட்டுமின்றி, மேல்மலைக் கிராமங்களிலும் அதிக அளவு பயிரிடப்படுகின்றது.

பொதுவாக, ஒரு கிலோ ரூ. 12 முதல் ரூ. 15 வரை விற்கப்படும். தற்போது, விளைச்சல் குறைவு காரணமாக ஒரு கிலோ ரூ. 30 முதல் ரூ. 40 வரை செல்கிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தற்போது, கொடைக்கானலில் விற்பனையாகும் உரங்கள் தரமற்றவையாக உள்ளன. பூச்சி மருந்துகள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. இங்கு, பல ஆண்டுகளாக உரக் கடைகளில் ஆய்வு நடத்தப்படாமல் உள்ளது. இதனால், தரமற்ற விவசாய இடு பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்றனர்.

### ஈரோடு மாவட்டத்தில் கன மழை: பெருந்துறையில் 100 மி.மீ. பதிவு

ஈரோடு மாவட்டத்தில் புதன்கிழமை இரவு கன மழை பெய்தது.

பெருந்துறையில் அதிகபட்சமாக 100 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது. இதன் காரணமாக ஈரோடு மாவட்டம் முழுவதும் கடந்த சில நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இந்நிலையில், வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியதன் காரணமாக புதன்கிழமை காலை முதல் இரவு வரையும், வியாழக்கிழமை மாலையும் மாவட்டம் முழுவதும் பலத்த மழை பெய்தது.

பெருந்துறையில் புதன்கிழமை மாலை 3 முதல் 5 மணி வரை பலத்த இடி மின்னலுடன் கன மழை பெய்தது. அதன் பிறகு இரவு முழுவதும் மழை தூறிக் கொண்டே இருந்தது.

இதுபோல, பெருந்துறை பகுதியில் உள்ள புங்கம்பாடி, காஞ்சிக்கோவில் பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது. ஈரோட்டில் புதன்கிழமை மாலை 5 மணிக்கு லேசாக மழை தூறியது. பிறகு அது பலத்த மழையாக மாறியது. சுமார் 2 மணி நேரம் அந்த மழை நீடித்தது.

இதனால் தாழ்வான பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழையின் காரணமாக இரவில் குளிர்ந்த காற்று வீசியது. சத்தியமங்கலம், கொடிவேரி, கோபி, கவுந்தப்பாடி உள்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பலத்த மழை பெய்து உள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை மற்றும் அதன் அருகே உள்ள புங்கம்பாடி ஆகிய இடங்களில் 100 மி.மீ மழை பதிவாகி உள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் புதன்கிழமை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

கவுந்தப்பாடி-11.2, பவானிசாகர்-4.8, கொடுமுடி-1.8, பெருந்துறை, புங்கம்பாடி-100.

## ஈரோடு மாட்டுச் சந்தை: கறவை மாடு ரூ.1 லட்சத்துக்கு விற்பனை

கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தையில் கறவை மாடு ஒன்று ரூ.1 லட்சத்துக்கு விலை போனது.

இச்சந்தையில் வாரந்தோறும் வியாழக்கிழமை மாடுகள், எருமைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. கோவை, ஈரோடு, சேலம், நாமக்கல், தருமபுரி, கரூர், திருப்பூர், திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து மாடுகள், எருமைகள் விற்பனைக்காகக் கொண்டு வரப்படுகின்றன.

கர்நாடகம், ஆந்திரம், கேரளம் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் அவற்றை வாங்கிச் செல்வது வழக்கம். கடந்த வாரத்தை ஒப்பிடும்போது இந்த வாரம் மாடுகள், எருமைகளின் விலையில் பெரிய அளவில் மாற்றம் இல்லை.

ஓமலூரில் இருந்து விவசாயி ஒருவர் கொண்டு வந்த ஒரு கறவை மாடு ரூ.1 லட்சத்துக்கு விலை போனது. இந்த மாட்டை கேரள விவசாயி ஒருவர் வாங்கிச் சென்றார். சுமார் 300 கிலோ எடை கொண்ட இந்த மாடு தினமும் 35 லிட்டர் பால் கறக்கும் என்று அதன் உரிமையாளர் தெரிவித்தார். மேலும் இச்சந்தையில், மாடுகள் ரூ.18,000 முதல் ரூ.35,000 வரையும், எருமைகள், ரூ.19,000 முதல் ரூ.33,000 வரையும் விலைபோனதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

### பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 80.02 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடியாகும். அணைக்கு விநாடிக்கு 1,000 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,899 கன அடி நீரும், வாய்க்காலில் 2,400 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டன. அணையில் நீர் இருப்பு 15.69 டி.எம்.சி. ஆகும்.

### உதகையில் 20-ஆம் தேதிவிவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் உதகையில் வரும் 20-ஆம் தேதி நடக்கிறது.

இதுதொடர்பாக தோட்டக்கலைத்துறை இணை இயக்குனர் என்.மணி தெரிவித்துள்ளதாவது:

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் உதகையில் நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் தலைமையில் வரும் 20-ஆம் தேதி காலை 11 மணிக்கு நடக்கிறது. இக்கூட்டத்தில், விவாதிக்கும் வகையில் விவசாயிகள் தங்களது விவசாயம் தொடர்பான குறைகள் இருப்பின் அவற்றை தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர், தபால் பெட்டி எண் 72, உதகை-1 என்ற முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம். இக்கூட்டத்திற்கான கோரிக்கைகளில் பொதுவான கோரிக்கைகளை தவிர்த்து தங்களது விவசாயம் தொடர்பான மற்றும் நீர்ப்பாசனம், இடுபொருட்கள் போன்ற கோரிக்கைகளை மட்டுமே அனுப்பி வைக்க வேண்டும்.

## குன்னூரில் பலத்த மழை

குன்னூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வியாழக்கிழமை திடீரென மழை பெய்ததால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

குன்னூரில் வழக்கமாக ஜூன், ஜூலை மாதங்களில் பெய்ய வேண்டிய தென்மேற்கு பருவமழை பொய்த்துப் போனதால் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டனர். செப்டம்பர் மாதத்தில் பெய்யும் வடகிழக்குப் பருவ மழையை நம்பிக் காய்கறி விவசாயிகள் கேரட், பீட்ரூட், உருளைக்கிழங்கு உள்ளிட்ட, பல்வேறு காய்கறிகளை பயிரிட்டுக் காத்திருந்தனர்.

இந்நிலையில், செப்டம்பர் மாதத்தில் நீலகிரியில் இரண்டாவது சீசன் துவங்கியுள்ள நிலையில் கடந்த இரண்டு நாட்களாக லேசான மழை பெய்து வந்தது. குன்னூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சேலாஸ், நான்சச், ட்ரூக்,, கொலக்கம்பை, கோத்தகிரி, உள்ளிட்ட பகுதிகளில் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது.

மதியம் திடீரென பலத்த மழை பெய்யத் துவங்கியது. இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. கடந்த மூன்று மாத அளவில் பெய்த மழையில் இது சற்று அதிகமாக இருந்ததால், மழையை நம்பி இருந்த காய்கறி விவசாயிகள் மற்றும் பொது மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## பந்தலூர் பகுதியில் கன மழை: தேயிலைத் தோட்டங்கள் நீரில் மூழ்கின

பந்தலூர் பகுதியில் தொடர்ந்து கன மழை பெய்து வருவதால் தாழ்வான நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

நீலகிரி மாவட்டம், பந்தலூர் பகுதியில் புதன்கிழமை இரவு முதல் கன மழை பெய்து வருகிறது. இதனால் தொண்டியாளம் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் ஆற்றோரமுள்ள சிலர், பாதுகாப்புக் கருதி, முன்னெச்சரிக்கையாகத் தங்கள் வீடுகளைக் காலி செய்து விட்டு, உறவினர்கள் வீடுகளுக்குச் சென்றுவிட்டனர்.

அத்திக்குன்னா பகுதியிலுள்ள ஆற்றில் கரைபுரண்டு ஓடிய வெள்ளம் அப்பகுதியில் உள்ள சில வீடுகளில் புகுந்தது. சாலைகளில் பல இடங்களில் மண் சரிவுகள் ஏற்பட்டன.

பொன்னானி ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடுவதால் ஆற்றங்கரையிலுள்ள தேயிலைத் தோட்டங்கள் மற்றும் விவசாயப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

உப்பட்டி பகுதியிலுள்ள மேஸ்திரிகுன்னு, பூதானக்குன்னு ஆகிய கிராமங்களில் பல இடங்களில் மண் சரிவும் ஏற்பட்டுள்ளது.

### கால்நடைகளுக்கு தடுப்பூசி

தருமபுரி மாவட்டத்தில் உள்ள 3.53 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் ஐந்தாம் சுற்று தடுப்பூசி செப்டம்பர் மூன்றாம் வாரம் முதல் போடப்படுகிறது.

இதுகுறித்து கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கால் மற்றும் வாய் கோமாரி நோயானது மாடுகளைத் தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்துகிறது.

கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைவு, எருதுகளில் வேலைத்திறன் குறைவு, கறவை மாடுகளில் சினைப்பிடிப்பு தடைபடுவது, இளங்கன்றுகளின் இறப்பைத் தடுக்கும் வகையில் தருமபுரி மாவட்டத்தில் தேசிய கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசித் திட்டத்தின் கீழ் அனைத்துக் கிராமங்களுக்கும் தடுப்பூசிக் குழுவினர் நேரிடையாகச் சென்று பசு மற்றும் எருமைகளுக்கு தடுப்பூசி போடவுள்ளனர்.

இதுதொடர்பாக கிராமப்புற விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த அனைத்துக் கிராமங்களிலும் சிறப்பு கிராமசபைக் கூட்டம் நடைபெற உள்ளது.

நோயிலிருந்து கால்நடைகளைப் பாதுகாக்க வருகிற (செப்டம்பர்) மூன்றாம் வாரம் முதல் ஒவ்வொரு கிராமத்திலும் எந்த நாளில் தடுப்பூசி போடப்படுகிறது என்பதை அறிந்து கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசி தவறாமல் போட்டு பயனடையுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### விதைக் கிராமத் திட்டப் பயிற்சி முகாம்

ராசிபுரம் - வெண்ணந்தூர் வட்டார வேளாண்மைத் துறை சார்பில், விவசாயிகளுக்கான விதைக் கிராமத் திட்டப் பயிற்சி முகாம்கள் அண்மையில் நடைபெற்றன.

வடுகம் கிராமத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமில் ராசிபுரம் வட்டார வேளாண்மைத் துறை உதவி இயக்குனர் ஆர்.வரதராஜு தலைமை வகித்தார். வேளாண்மைத் துறை இணை இயக்குனர் ர.ராஜேந்திரன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பேசினார். எண்ணெய் வித்து உற்பத்தித் தொழில்நுட்பம், மண்புழு உரம் தயாரிப்பு போன்றவை குறித்து விளக்கிக் கூறப்பட்டது.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார் பங்கேற்று, பயிர் காப்பீட்டுத் திட்டம் குறித்துப் பேசினார். வேளாண்மை அலுவலர் பெ.ஜெயமாலா, உதவி அலுவலர் ரத்தினவேல், தோட்டக்கலை துணை அலுவலர் க.சுப்பிரமணியம் ஆகியோர் தொழில்நுட்பம், மானியத் திட்டங்கள் குறித்துப் பேசினர். விழாவில் விவசாயிகளுக்கு இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

இதேபோல, வெண்ணந்தூர் வட்டாரத்தில் விதைக் கிராமத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு எண்ணெய் வித்து சாகுபடி குறித்த பயிற்சி அத்தனூர் ஆயிபாளையம் விவசாயி பெரியசாமி தோட்டத்தில் நடைபெற்றது. இந்தப் பயிற்சி தொடக்க விழாவில் வேளாண்மை உதவி இயக்குநர் கு.சீனிவாசன் வரவேற்று, வெண்ணந்தூர் வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் வேளாண்மைத் துறை திட்டங்களை எடுத்துக் கூறினார்.

சிறப்பு அழைப்பாளராக நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலைய உழவியல் நிபுணர் அழகுதுரை பங்கேற்று, எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி குறித்து விளக்கிப் பேசினார்.

பின்னர், வேளாண்மை அலுவலர் கை.வசுமதி, சான்று விதைகள் உற்பத்தி செய்யும் முறைகள் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். துணை வேளாண்மை அலுவலர் பசுபதி விதை பண்ணை அமைத்து பயன் பெறவும், பயிர் எண்ணிக்கை பராமரித்தல் குறித்தும் விளக்கினார். மேலும், இந்தப் பயிற்சியில் எண்ணெய் வித்து சாகுபடி குறித்த விவரங்களை படக் காட்சியாகக் காண்பிக்கப்பட்டது.

உதவி வேளாண்மை அலுவலர்கள் கருப்பசாமி, அந்தோணிசாமி நிலக்கடலை விதை நேர்த்தி செய்து காண்பித்தனர். இதில், உதவி வேளாண்மை அலுவலர் மேகலா, அட்மா அலுவலர்கள் ரமேஷ், ஜமுனாராணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### வேளாண் உற்பத்தியைப் பெருக்க ரூ.1 கோடியில் திட்டம்

மல்லசமுத்திரம் வட்டாரத்தில் வேளாண்மை, பால் உற்பத்தியைப் பெருக்க ஒரு கோடி ரூபாயில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கான நிதி ஆதாரம் கோரி திட்ட அறிக்கை மாவட்டத் திட்டக் குழுவிடம் அளிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத் திட்டக் குழுக் கூட்டம் அதன் தலைவர் கே.காந்திமுருகேசன் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வன அலுவலர் பத்மாவதி, பெரியார் பல்கலைக் கழகப் பேராசிரியர் வெங்கடாசலம், மாவட்ட ஊராட்சி செயலர் சரஸ்வதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், மல்லசமுத்திரம் ஒன்றியத்தில் வேளாண் மற்றும் பால் உற்பத்தியைப் பெருக்க ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டுத் திட்ட அறிக்கையைத் தயார் செய்து வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் சமர்ப்பித்தார்.

இதுகுறித்து அவர் கூறியது: மழையளவு குறைந்த எருமப்பட்டி ஒன்றியம் வடவத்தூர் கிராமத்தில் தேசிய பருவநிலை மாற்றத்துக்கு ஏற்ற வேளாண்மை முனைப்புத் திட்டத்தின் கீழ் ரூ.40 லட்சத்தில் அங்குள்ள செங்குட்டை, ஆயிரம் குட்டை ஆகியவற்றை தூர்வாரி நீராதாரம் சேமிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தவிர, அங்குள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து, 7 குழுக்கள் அமைத்து வறட்சியைத் தாங்கி வளரும் புதிய ரகக் கடலை, வெங்காயம், உளுந்து, பாசிப் பயறு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி புதிய தொழில்நுட்பங்களும் அறிமுகம் செய்யப்பட்டன.

கடந்த மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையின் மூலம் வடவத்தூர் கிராமத்திலுள்ள 120 ஏக்கரில் வேளாண் உற்பத்தி பெருகி 330 விவசாயிகள் ஆண்டு முழுவதும் வருவாய் ஈட்டக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேபோல, மழையளவு குறைந்த வட்டாரமாக மல்லசமுத்திரமும் அடையாளம் காணப்பட்டுள்ளது. அங்குள்ள 24 ஊராட்சிகளில் 12 ஊராட்சிகளில் ஒருங்கிணைந்த பண்ணையமும், 14 ஊராட்சிகளில் ஒருங்கிணைந்த பால் உற்பத்தியும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, உயர் ரக எருமைகளை வளர்த்துக் குழுக்களாகப் பால் சேகரித்து விற்பனை செய்யவும், உபரி பாலைக் கொண்டு தனி பிராண்ட் மூலம் நெய் தயாரித்து விற்பனை செய்யவும், தனிநபர் நீராதாரங்களைப் பெருக்கி ஆண்டு முழுவதும் வேளாண் உற்பத்தியைச் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்து தருவதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த ஒருங்கிணைந்த பால் உற்பத்தித் திட்டத்துக்கு ரூ.75 லட்சமும், ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்துக்கு ரூ.25 லட்சம் தேவைப்படும் என்றார் அவர்.

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ் கொல்லிமலை, எருமப்பட்டி, நாமகிரிப்பேட்டை, வெண்ணந்தூர், மல்லசமுத்திரம் ஆகிய ஒன்றியங்களில் கல்வித் தரத்தை மேம்படுத்துவது, கால்நடைகளுக்கு உரிய பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்டத் திட்டக் குழு உறுப்பினர்கள், பல்வேறு துறை அலுவலர்கள் பலர் பங்கேற்றனர்.

## துவரை நடவு முறை:விவசாயிகளுக்கு மானியம்

பரமத்தி வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு துவரை நடவு முறைக்கு மானியம் வழங்கப்படும் என வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் தெரிவித்தார்.

இந்த வட்டாரத்தில் துவரை மகசூலை அதிகபடுத்த துவரை நாற்று நடவு செய்தல் தொழில்நுட்பம் கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

நிகழாண்டும் இந்த நவீன தொழில்நுட்பத்தை ஊக்கப்படுத்தும் விதமாக விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து பரமத்தி வேளாண் உதவி இயக்குநர் குருலிங்கம் கூறியது:

ஒரு ஹெக்டேர் துவரை நடவு செய்வதற்கான நாற்றங்கால் தயாரிக்க 5 அங்குலத்துக்கு 3 அங்குலம் என்ற அளவில் 6,250 பாலித்தின் பைகளில் செம்மண், மக்கிய தொழு உரம் ஆகியவற்றை சம அளவில் கலந்து நிரப்ப வேண்டும்.

ஒரு பைக்கு விதை நேர்த்தி செய்யப்பட்ட இரண்டு துவரை விதைகளை மேலாக ஊன்ற வேண்டும். பின்னர், நீர் தெளித்து நாற்றுகளை பராமரிக்க வேண்டும். நாற்று விட்ட 30-ஆம் நாள் வயலில் நடவு செய்ய வேண்டும். பின்னர், 25-ஆம் நாளில் துவரைச் செடியின் நுனியை கிள்ளி விட வேண்டும்.

இதனால், பக்கக் கிளைகள் அதிகரித்து காய்களின் எண்ணிக்கை உயர்ந்து மகசூல் கூடும். பரமத்தி வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலம் துவரை நடவு முறைக்குத் தேவையான இடுபொருள்களை பெற்று ஒரு ஹெக்டேர் செயல் விளக்கத் திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு ரூ.7,500 மானியமாக வழங்கப்படும்.

சொந்தமாகவே நாற்று விட்டு நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு ஊக்கத்தொகை மானியமாக ரூ.7,500 வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு பரமத்தி வட்டார வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்களைத் தொடர்பு கொள்ளாம் என்றார் அவர்.

## கல்லக்குடியில்55 மி.மீ. மழை

திருச்சி மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை 8 மணி வரை பெய்த மழையில் கல்லக்குடியில் அதிகபட்சமாக 55 மிமீ மழை பதிவாகியுள்ளது. திருச்சியில் தினமும் மாலை நேரத்தில் தொடங்கும் மழை வெவ்வேறு பகுதிகளில் விடியவிடிய பெய்து

வருகிறது. இதன்படி, புதன்கிழமை இரவு முதல் வியாழக்கிழமை காலை 8 மணி வரை பெய்த மழை அளவு விவரம் (மிமீ-யில்): லால்குடி- 48, புள்ளம்பாடி- 50, தாத்தையங்கார்பேட்டை- 30, துறையூர்- 2, விமான நிலையம்- 0.3, திருச்சி நகரம்- 1.40, நந்தியாறு தலைப்பு- 32, கல்லக்குடி- 55.40, வாய்த்தலை அணை- 1, சமயபுரம்- 22 சராசரி மழையளவு- 11.34.

## பருப்பு வகை அபிவிருத்தி திட்டத்தில் ஏக்கருக்கு 50% மானியத்துடன் பயிர்க் கடன்: ஆட்சியர்

பருப்பு வகை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஏக்கருக்கு 50 சதவிகித மானியத்துடன் பயிர்க்கடன் வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தெரிவித்தார்.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்துக்குள்பட்ட மணவாசி, வடுகப்பட்டி, வீரராக்கியம், உப்பிடமங்கலம் ஊராட்சிகளில் ரூ. 27.14 லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை வியாழக்கிழமை ஆய்வு செய்தார் ஆட்சியர்.

மணவாசி ஊராட்சியில் வேளாண்துறை மூலம் இரண்டரை ஏக்கர் நிலத்தில் துவரை சாகுபடி செய்யப்பட்டுள்ளதை பார்வையிட்ட ஆட்சியர், பருப்பு வகை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், ஏக்கருக்கு 50 சதவிகித மானியத்துடன் பயிர்க்கடன் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தில் ஏக்கருக்கு ரூ. 35,000 முதல் ரூ.40,000 வரை வருமானம் கிடைக்கும். மற்ற விவசாயிகளும் இந்த திட்டத்தை பின்பற்றலாம் எனக் கூறினார்.

வடுகப்பட்டியில் ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு வரும் பண்ணைக் குட்டைகளைப் பார்வையிட்ட ஆட்சியர், குறிப்பிட்ட காலத்துக்குள் பணியை முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக உப்பிடமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை பார்வையிட்டு அங்குள்ள மருத்துவ வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

ஆய்வின் போது சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் வே. நளினி, வட்டார மருத்துவர் மணிமேகலை, வேளாண் உதவி இயக்குநர்கள் செளந்திரம், ராஜேந்திரன், ராஜவேல் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## விவசாயிகளுக்கு வேளாண் துறை யோசனை

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது பெய்துவரும் மழையைப் பயன்படுத்தி, விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய வேளாண் பணிகள் குறித்து மாவட்ட வேளாண் துறை பல்வேறு யோசனைகளைத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து புதுக்கோட்டை இணை இயக்குநர் கே.எம். ஷாஜஹான் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது தென்மேற்குப் பருவமழை நன்கு பெய்து வருகிறது. ஆகஸ்ட் மாதத்தில் இயல்பான மழையளவான 108.3 மி.மீ.க்கு 124.7 மி.மீ. மழை பெய்துள்ளது. செப்டம்பர் மாதம் இயல்பான மழையளவான 107.3 மி.மீ.க்கு இதுவரை 54.97 மி.மீ. மழை பெய்துள்ளது. இந்த மழையைப் பயன்படுத்தி விவசாயிகள் பின்வரும் வேளாண் பணிகளை மேற்கொள்ளலாம்.

சம்பா நெல் சாகுபடி: சம்பா நாற்றங்கால் அமைக்கும் பணிகளை விவசாயிகள் மேற்கொள்ளலாம். ஓர் ஏக்கர் நடவு செய்ய 8 சென்ட் நாற்றங்கால் போதுமானது. திருந்திய நெல் சாகுபடிக்கு ஓர் ஏக்கர் நடவுசெய்ய ஒரு சென்ட் நாற்றங்கால் போதுமானது.

சம்பா நாற்றங்கால் அமைக்கும் பணியோடு, சம்பா நெல் சாகுபடி செய்யவுள்ள நடவு வயலையும் உழுது பசுந்தாள் உரப்பயிரான சணப்பு போன்றவற்றை ஏக்கருக்கு 10 கிலோ விதைக்கலாம்.

இதை 25-30 நாட்களில், அதாவது பூப்பதற்கு முன்பு மடக்கி உழவு செய்ய வேண்டும். சம்பா நாற்றுகள் நடவுக்கு தயாராவதற்குள் சணப்பு பயிரை மடக்கி உழுது நடவு வயல் தயாராக இருக்கும். இதனால், மண்ணில் அங்ககத் தன்மை அதிகரித்து மண்வளம் மேம்படும்.

சம்பா நெல் நேரடி விதைப்பு: ஏற்கெனவே உழவு செய்து வயலை தயாராக வைத்துள்ள விவசாயிகள் ஓர் உழவு செய்து நேரடி விதைப்பு மேற்கொள்ளலாம். வயலில் தண்ணீர் தேங்கியுள்ள போதோ, ஈரம் அதிகமாக இருக்கும் போதோ நேரடி விதைப்பு செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

ஏற்கெனவே, நேரடி நெல் விதைப்பு செய்துள்ள விவசாயிகள் விதைத்து 3-5 நாட்களுக்குள் பென்டிமெத்தலின் களைக்கொல்லி மருந்தை ஏக்கருக்கு ஒரு லிட்டர் என்ற வீதத்தில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.

வயலில் ஈரம் அதிகமாக இருக்கும்பட்சத்தில் களைக்கொல்லியை 20 கிலோ மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும்.

ஏற்கெனவே விதைத்து 15-20 நாள்களில் களைகள் முளைத்திருந்தால் பிஸ்பைரிபாக் சோடியம் 10 எஸ்.சி என்ற களைகள் முளைத்தப் பிறகு அடிக்கும் களைக்கொல்லி மருந்தை ஏக்கருக்கு 100-120 மில்லியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளித்து புல், கோரை மற்றும் அகன்ற இலை களைகளைக் கட்டுப்படுத்தலாம்.

முன்பே, நேரடி நெல் விதைப்பு செய்துள்ள விவசாயிகள் விதைத்து 15 நாட்கள் கழித்து புல், கோரை மற்றும் அகன்ற இலைகளை களை எடுக்க வேண்டும். இதைச் செய்வதால் பயிருக்கு காற்றோட்டம் அதிகரித்து பயிர் நன்கு செழித்து வளர உதவும்.

## வட தமிழகம், புதுவையில் கன மழை தொடரும்

வட தமிழகம் மற்றும் புதுவையில் வெள்ளிக்கிழமையும் கன மழை தொடரும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது:

வங்கக் கடலில் உருவாகியிருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி இப்போது வலுவிழந்துள்ளது. ஆனால் வளி மண்டல மேல் அடுக்கில் ஏற்பட்ட காற்றுச் சுழற்சி காரணமாக வட தமிழகம் மற்றும் புதுவையின் பல பகுதிகளில் வெள்ளிக்கிழமையும் கன மழை நீடிக்கும். சென்னையைப் பொருத்தவரையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில பகுதிகளில் இடியுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் வியாழக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் தமிழகத்தில் அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் தேவலாவில் 130 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மற்ற பகுதிகளில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): பரமத்தி வேலூர் - 80, போச்சம்பள்ளி - 70, காரைக்கால், நாகப்பட்டினம், சீர்காழி, பாபநாசம், } 30, சென்னை, ஈரோடு, சத்தியமங்கலம், தாம்பரம், சோழவந்தான் - 20, சிதம்பரம், செம்பரம்பாக்கம், திருத்தணி, சோழவரம், ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம், பூந்தமல்லி, பூண்டி, வேலூர், விராலிமலை, ஆரணி, ராமநாதபுரம் - 10.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ஆங்காங்கே வியாழக்கிழமை காலை முதல் பிற்பகல் வரையில் மழை பெய்தது.

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

### விதைப்பூண்டு விற்பனை சுறுசுறுப்பு

விதைப்பூண்டுக்கு, மேட்டுப்பாளையம் காய்கறி மொத்த மார்கெட்டில் அதிகளவில் விற்பனையானது. நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி பகுதியில் விளையும் பூண்டு மருத்துவ குணமும், காரத் தன்மையும் நிறைந்தது. இதனால், ஊட்டி பூண்டை விதைக்கு பயன்படுத்தி வருகின்றனர். மண்டி உரிமையாளர் கார்த்திகேயன் கூறியதாவது: ஒரு கிலோ விதைப்பூண்டு நட்டால், நன்கு மழை பெய்தால், 8 முதல் 10 கிலோ வரை பூண்டு கிடைக்கும். மேலும் கடந்த ஒரு மாதமாக மழை பெய்து வருவதால், அறுவடையின் போது மகசூல் பாதியாக குறைந்து விட்டது. இந்த பூண்டை உணவுக்கு பயன்படுத்துவதை விட, விதைக்குத் தான் அதிகளவில் பயன்படுத்துகின்றனர். மத்தியபிரதேசம், ராஜஸ்தான், குஜராத் ஆகிய மாநில விவசாயிகள்,ஊட்டி பூண்டை விதைக்காக வாங்கிச் செல்கின்றனர். அங்கு விளையும் பூண்டை மீண்டும் விதைக்காக பயன் படுத்தினால், எதிர்பார்த்த மகசூல் கிடைப்பதில்லை. மேட்டுப்பாளையம் மண்டிகள் மற்றும் கடைகளில், ஒரு கிலோ விதைப்பூண்டு ரூ.70 முதல் ரூ.130 வரை விற்பனை ஆனது.

### சின்ன வெங்காயம் ரூ.45 மேல் இருக்க வாய்ப்பு

மூன்று பருவங்களில் பயிரிடப்படும் சின்ன வெங்காயத்தை இருப்பு வைப்பதன் மூலம் ஆண்டு முழுவதும் சந்தையில் கிடைக்கிறது.வரத்து குறைவினால், இவ்வாண்டு ஏப்., முதல் ஜூன் வரை சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை கிலோவுக்கு 40 - 50 ரூபாய் வரை இருந்தது. கர்நாடகத்திலிருந்து கடந்த ஜூன் மாதம் துவங்கிய வரத்து தற்போது முடிவடையும் நிலையில் உள்ளது.அதேசமயம், மழையால் தரம் குறைந்துள்ளது. மைசூர்

வெங்காயத்தின் விலை கிலோவுக்கு 24 - 30 ரூபாய் வரை உள்ளது. தற்போது, தேனி, திண்டுக்கல், மதுரை, திருச்சி, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலிருந்து சந்தைக்கு வரத்துள்ளது. தமிழ்நாட்டு சின்ன வெங்காயத்தின் விலை திண்டுக்கல் சந்தையில் 35 - 43 ரூபாய் வரை உள்ளது. புரட்டாசி விதைப்புக்கு விதை தேவை என்பதால் செப்., மத்தியிலிருந்து அக்., வரை விலை உயர வாய்ப்புள்ளது. சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை அறுவடை சமயத்தில் (செப்., அக்., மாதங்கள்) கிலோவுக்கு 45 ரூபாயுக்கு மேல் இருக்க வாய்ப்புள்ளது. விவசாயிகள் அறுவடைசெய்த சின்ன வெங்காயத்தை இருப்புவைத்து அக்., மாத மத்தியில் விற்கலாம். விவரங்களுக்கு, வே ளாண் பல்கலை உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையத்தை 0422 2431405 என்ற எண்ணிலும், காய்கறி பயிர்கள் துறையை 0422 6611374/283 என்ற எண்களில் தொடர்புகொள்ளலாம்.

### சம்பா பருவத்திற்கு உழவு பணிகள் தீவிரம்

பொன்னேரி:சம்பா பருவத்திற்கு, நெல் பயிரிட விவசாயிகள், விளை நிலங்களை உழுது தயார்படுத்தி வருகின்றனர்.மீஞ்சூர் ஒன்றியத்தில், 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பா, சொர்ணவாரி, நவரை என, ஆண்டுக்கு, மூன்று முறை நெல் பயிரிடப்படுகின்றன. கடந்த ஜூலை மாதம், சொர்ணவாரி சாகுபடிக்காக விளை நிலங்களில் பயிரிடப்பட்டிருந்த நெற்கதிர்கள், அறுவடை செய்யப்பட்டன.தற்போது, சம்பா பருவத்திற்காக, நாற்று விடுவது, உழவு, வரப்புக்களை வெட்டி சீரமைப்பது, போன்ற பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு உள்ளனர். சில தினங்களாக, மழை பெய்து வருவதால், விளை நிலங்களில், விவசாயிகள் டிராக்டர்களை கொண்டு, எளிதாக உழவுப் பணிகளை மேற்கொள்கின்றனர். தேவம்பட்டு, கங்காணிமேடு, தொட்டிமேடு உள்ளிட்ட, உவர்ப்பு நீர் கிராமங்களில், ஆண்டுக்கு ஒருமுறை மட்டும் மழைநீரை கொண்டு விவசாயம் செய்யப்படுகிறது. தற்போது இவர்களும், சம்பா பருவத்திற்காக, நெல் பயிரிட, பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். காணியம்பாக்கம், தேவதானம் உள்ளிட்ட பகுதிகளில் செம்மை நெல் சாகுபடி திட்டத்திற்காக, விளை நிலங்களை உழுது தயார்படுத்தி வருகின்றனர்.

### சங்கராபுரம் பகுதியில் மழை கரும்பு விவசாயிகள் மகிழ்ச்சி

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதியில் பெய்த மழையால் கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். சங்கராபுரம் பகுதியில் 10 ஆயிரம் ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கோடை வெயிலின் தாக்கம் மற்றும் பருவ மழை

பொய்த்ததால் நீர்நிலைகள் வறண்டன. கரும்பு பயிருக்கு போதிய தண்ணீர் இறைக்க கிணறுகளில் தண்ணீர் இல்லாததால் கரும்பு பயிர்கள் அதிகளவில் காய்ந்து போனது. கடந்த வாரம் சங்கராபுரம் பகுதியில் 3 நாட்கள் பெய்த கன மழையால் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இதனால் சங்கராபுரம் பகுதியில் உள்ள ஒரு சில ஏரிகளுக்கு தண்ணீர் வரத் தொடங்கி உள்ளது. ஏரி, நீர்நிலைகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக சங்கராபுரம் பகுதியில் காய்ந்த கரும்புக்கு மழை உபயோகமாக இருக்கும். மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## நாட்டுக்கோழி பண்ணையில் மழைக்கால பராமரிப்பு பணி

சேலம்: சேலம் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய டாக்டர்கள் முருகேசன், துரை திருநாவுக்கரசு, வீரசெல்வம் ஆகியோர் வெளியிட்ட அறிக்கை: தொடர்ந்து மழை பெய்து வருவதாலும், பண்ணையின் சுற்றுப்புறத்தில் நீர் தேங்குவதாலும், காற்றில் ஈரப்பதம் அதிகரிக்கும். சீதோஷ்ண நிலை மாற்றத்தால், கோழிகளுக்கு ரத்தக்கழிச்சல், சுவாச நோய்கள், பூஞ்சை காளான், நச்சூட்டு உள்ளிட்டவை ஏற்படும். மழை நீர் கூரை வழியாகவோ, பக்கவாட்டு வழியாகவோ, பண்ணைக்குள் வருவதை தடுக்க வேண்டும். குளிர்ந்த காற்று கோழிகள், குஞ்சுகளை தாக்காதவாறு பாதுகாக்க வேண்டும். குஞ்சுகள் அடைப்பானில் இருந்தால், வழக்கமான செயற்கை வெப்பத்தை காட்டிலும், இரு மடங்கு வெப்பம் அளிக்க வேண்டும். பகல், இரவு எந்த நேரத்திலும் அந்த செயற்கை வெப்பம், குறைந்த பட்சம், 12 நாட்கள் வரை இருக்க வேண்டும். கூண்டு முறையில், கோழிகளை வளர்க்கும்போது, கோழிக்கழிவுகளை அவ்வப்போது அப்புறப்படுத்துவது நல்லது. இல்லையெனில், அதில் இருந்து துர்நாற்றம் வீசுவதுடன், ஈக்கள் முட்டையிட்டுப் பெருகுவதற்கு, அது ஒரு களமாக அமைந்துவிடும். ஈ தொந்தரவு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கோழித்தீவனம் இயற்கையாகவே காற்றில் உள்ள ஈரப்பதத்தை கிரகிக்கும் தன்மை கொண்டது. இதனால், தீவனம் கெட்டிப்படுவதுடன், அதில், பூஞ்சைக் காளான் வளர்ந்து தீவனத்தின் மூலம் கோழிகளில் பூஞ்சைக் காளான் நச்சூட்டின் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. சொந்தமாக தீவனம் தயாரிப்பவர்கள், 15 நாட்களுக்கு ஒரு முறை தேவைக்கு தக்கவாறு தீவனம் அரைத்துக் கொள்ள வேண்டும். கலப்புத் தீவனம் வாங்கிப் பயன்படுத்துபவர்கள், தேவையான அளவு மட்டும் தீவனத்தை வாங்கி இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். ரத்தக்கழிச்சல் நோய்க்கான தடுப்பு மருந்தை, கால்நடை டாக்டர்கள் ஆலோசனைப்படி, தீவனத்தில்

கலக்க வேண்டும். வைட்டமின் சி, மூலிகை மூலமாகவும் கோழிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தலாம். மேலும் விபரங்களுக்கு, சேலம் கலெக்டர் அலுவலகம் எதிரில் உள்ள கால்நடை பயிற்சி மையத்தை தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண்: 0427 - 2410408.

**பாய் நாற்றங்கால் நடவு முறை அறிமுகம் :கூடுதல் மகசூல் கிடைப்பதால் ஆர்வம்**

பள்ளிபாளையம்: புதிய தொழில் நுட்பமான, பாய் நாற்றங்கால் நடவு முறை, களியனூரை சேர்ந்த விவசாயி ஒருவர் மேற்கொண்டுள்ளார். அதன் மூலம், கூடுதல் மகசூல் கிடைப்பதுடன், அதிக வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பள்ளிபாளையம் பகுதியில், மேட்டூர் கிழக்குக்கரை வாய்க்கால் பாசனத்தை பயன்படுத்தி, பத்தாயிரம் ஏக்கர் பரப்பளவில், விவசாயிகள், நெல் சாகுபடி மேற்கொண்டுள்ளனர். ஆட்கள் பற்றாக்குறை காரணமாக, நெல் நடவு மற்றும் அறுவடை செய்வதற்கு, வெளியூர்களில் இருந்து ஆட்களை அழைத்து வந்து, பணி மேற்கொள்ளப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு, 3,500 ரூபாய் வரை, நடவு கூலி வழங்கப்படுகிறது. அதனால், விவசாயிகளுக்கு, கூடுதல் செலவு ஏற்படுகிறது. ஆள் பற்றாக்குறை மற்றும் கூடுதல் செலவு காரணமாக, பலரும் மாற்றுத் தொழிலுக்கு செல்லும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இந்நிலையில், களியனுரை சேர்ந்த விவசாயி திருமூர்த்தி என்பவர், புதிய தொழில் நுட்பமான, பாய் நாற்றங்கால் முறையை பின்பற்றி, நெல் நடவு பணியை மேற்கொண்டுள்ளார். நாமக்கல் மாவட்டத்தில், முதன் முறையாக, இந்த புதிய நடவு முறையை, விவசாயி திருமூர்த்தி மேற்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த முறையில் நடவு செய்வதற்கு, ஆட்கள் தேவையில்லை. செலவும் குறைவதுடன், அறுவடைக்கும், இயந்திரத்தையே பயன்படுத்தலாம். அதனால், விவசாயிக்கு கூடுதல் மகசூல் கிடைப்பதுடன், அதிக வருவாய் கிடைக்கவும் வாய்ப்பு உள்ளது. பாய் நாற்றங்கால் முறையில், முதலில், பிளாஸ்டிக் பேப்பரை விரித்து வைத்துக் கொள்ள வேண்டும். தொடர்ந்து, சலிக்கப்பட்ட மணல், எரு மற்றும் தொழு உரம் ஆகியவற்றை கலந்து, பிளாஸ்டிக் பேப்பரில் பரப்பிவிட வேண்டும். பின்னர், விதை நெல் தூவிவிடவும். பின்னர், 20 நாட்கள் கழித்து, நடவு செய்வதற்கு, நாற்று தயாராகிவிடும். அவற்றை, நடவு இயந்திரம் மூலம் எடுத்துச் சென்று, வயலில் நடவு செய்யலாம். நெல் அறுவடை காலத்தில், அதற்கான இயந்திரத்தை கொண்டு அறுவடை செய்யலாம். அதனால், ஆட்கள் தேவையில்லை என்பதுடன், செலவும் மிச்சப்படுகிறது. இம்முறையை பின்பற்றினால்,

கூடுதல் மகசூல் கிடைப்பதுடன், அதிக வருவாயும் கிடைக்கிறது. இந்த புதிய தொழில் நுட்பத்தை, பள்ளிபாளையம் உதவி வேளாண் இயக்குனர் அசோகன், ஆலோசனைப்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

களியனூரை சேர்ந்த விவசாயி திருமூர்த்தி கூறியதாவது:

பாய் நாற்றங்கால் நடவு முறையை, மேற்கொண்டுள்ளேன். இம்முறையை பின்பற்றி நடவு செய்வதால், ஆட்கள் தேவையில்லை, செலவும் குறைகிறது.

அதிக மகசூல், கூடுதல் வருவாய் கிடைக்கிறது. தற்போது, ஐந்து ஏக்கரில், இந்த முறையை பயன்படுத்தியுள்ளேன், என்றார்.

## புரட்டாசி பட்ட நிலக்கடலை சாகுபடிக்கு தொழில்நுட்பம்

நாமக்கல்: "புரட்டாசி பட்ட நிலக்கடலை சாகுபடிக்கு, தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும்' என, நாமக்கல் விதைச்சான்று உதவி இயக்குனர் சுப்ரமணியம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:

நாமக்கல் மாவட்டத்தில், பரவலாக அனைத்து பகுதிகளிலும், மழை பெய்துள்ளதால், எதிர்வரும் புரட்டாசி பட்ட நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகள், உரிய முறையில் பயிரிட்டு பயன்பெறலாம். சாகுபடிக்கு, சான்று பெற்ற விதைகளை மட்டும் வாங்கி பயன்படுத்தவும். பூஞ்சான் விதை நேர்த்தியாக, ஒரு கிலோ விதைக்கு, நான்கு கிராம் டிரைக்கோ டெர்மா விரடி அல்லது பத்து கிராம் சூடோமேனாஸ் எதிர் உயிர் பூசனத்தை கொண்டு விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். அல்லது ஒரு கிலோ விதைக்கு, இரண்டு கிராம் கார்பெண்டாசில் கலந்து, 24 மணி நேரம் கழித்து விதைப்பு செய்ய வேண்டும். உயர் உர நேர்த்தி தேவையான விதையளவுடன், ஒரு பாக்கெட் ரைசோபியம் மற்றும் ஒரு பாக்கெட் பாஸ்டோ பேக்டீரியா, தேவையான அரிசி கஞ்சியுடன் கலந்து, அரை மணி நேரம் கழித்து, நிழலில் உலர்த்தி விதைப்பு செய்ய வேண்டும். மேலும், நிலக்கடலை சாகுபடி செய்ய உத்தேசித்துள்ள விவசாயிகள், விதைப்பண்ணை அமைத்து சாகுபடி செய்ய வேண்டும். விதைப்பண்ணை அமைக்க பதிவு செய்ய, வட்டார வேளாண் உதவி இயக்குனரை அணுகவும்.

## தொடர் மழையால் விவசாயிகளுக்கு ஆறுதல் : கைகொடுக்கும் நிலத்தடி நீர் மட்டம்

தர்மபுரி: வெப்ப சலனம் காரணமாக, சில நாட்களாக, தர்மபுரி மாவட்டத்தில் பெய்த கனமழை, விவசாயிகளுக்கு ஆறுதலை கொடுத்துள்ளது. தொடர்ந்து, வடகிழக்கு

பருவமழை கைகொடுக்கும் என்பதால், மாவட்டத்தில் நிலத்தடி நீர் மட்டம் உயர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. விவசாயத்தை பிரதானமாக கொண்ட, தர்மபுரி மாவட்டத்தில், 60 சதவீதம் பேர் விவசாய கூலி தொழிலை நம்பியுள்ளனர். கடந்த, 2005ம் ஆண்டுக்கு பின், மாவட்டத்தில் எதிர்பார்த் அளவுக்கு பருவமழை கை கொடுக்காத நிலையில், விவசாயம் பெரும் பாதிப்பை சந்தித்தது.இதனால், வேலை வாய்ப்புக்காக, விவசாய தொழிலாளர்கள், கட்டிட பணி உள்ளிட்ட பல்வேறு வேலைகளுக்கு செல்ல துவங்கினர். ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் குவாரிகள், செங்கல் சூளைகளுக்கு கொத்தடிமைகளாக பணிக்குச் செல்வதும் நடந்தது. மாவட்டத்தில், ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள், வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்களில் வேலை வாய்ப்பை நம்பியுள்ள நிலை, இன்று வரை, தொடர்ந்து வருகிறது. கடந்த, 2005ம் ஆண்டுக்கு பின், விவசாயத்தில் நிலையான வருவாய் பெற முடியாத நிலை, மாறி வரும் பருவ நிலைகள் காரணமாக, 20 முதல், 30 சதவீத விளை நிலங்கள் குடியிருப்பு பகுதியாக மாறியது. வானம் பார்த்த மானாவாரி நிலங்கள், நகரப்பகுதியையொட்டிய விவசாய நிலங்கள் உள்ளிட்டவைகள், வீட்டு மனைகளாக, கடந்த ஐந்தாண்டுகளில் அபரிமிதமாக விற்பனை செய்யப்பட்டது. விவசாயிகள், மாற்று தொழிலை நோக்கிச் செல்ல துவங்கினர். தொடர்ந்து, விவசாயம் செய்து வருவோர், மாற்று பயிர்களையும், வறட்சியை தாங்கி வளர கூடிய பயிர்களையும் பயிர் செய்வதில், அக்கறை காட்டி வந்தனர். இருப்பினும், குறிப்பிட்டு சொல்லும்படி, விவசாய பணிகள் இல்லை. கடந்தாண்டு, பருவமழை கைகொடுக்காத நிலையில், தர்மபுரி மாவட்டம், வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டது. வறட்சி மாவட்ட அறிவிப்பில், குறிப்பிட்ட சில பயிர்களுக்கு மட்டுமே, அரசு நிவாரணம் வழங்கியதால், சிறு விவசாயிகள், பெரும் பாதிப்பை சந்தித்தனர். இந்தாண்டும், கடந்த மாதம் வரை ஏமாற்றி வந்த தென்மேற்கு பருவமழை, கடந்த ஒரு வாரமாக வெப்ப சலனம் காரணமாக, மாவட்டம் முழுவதும் கனமழை பெய்துள்ளது. இதனால், மாவட்டத்தில் உள்ள நீர் ஆதாரங்களில், 10 முதல், 30 சதவீதம் வரை நீர் சேமிக்கப்பட்டுள்ளது. வறட்சி காரணமாக, கால்நடைகளுக்கு பசுந்தாள் தீவன தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையில், தற்போதைய மழை, விவசாயிகளுக்கு ஆறுதலை கொடுத்துள்ளது.

தொடர் மழை தொடர்ந்து, ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்யாத விவசாயிகள், தீவன பயிர்களான புல் வகை மற்றும் சோள தட்டை உள்ளிட்டவைகளை பயிர் செய்துள்ளனர். இதனால், வரும் நாட்களில், தீவன தட்டுப்பாடு குறையும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், தொடர் மழையால், நிலத்தடி நீர் மட்டம், சற்று கை கொடுத்துள்ளது. தொடர்ந்து, வடகிழக்கு பருவமழை கை கொடுக்கும் பட்சத்தில், வரும் நாட்களில், விவசாய பணிகள், கடந்த காலங்களை போல் சுறுசுறுப்படையும் என்ற நம்பிக்கை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

### கனமழை எதிரொலி மாடுகள் வரத்து குறைவு

ஈரோடு: மழை காரணமாக, மிக குறைந்த அளவிலான மாடுகளே விற்பனைக்கு வந்திருந்தது. ஈரோடு, கருங்கல்பாளையத்தில் நேற்றைய கறவை மாட்டு சந்தைக்கு, ஈரோடு, திருப்பூர் மாவட்ட கால்நடை வளர்ப்போர் சிந்து, சோலை, ஜெர்சி, செவலை, எச்.எஃப் ரக மாடுகள், எருமை மாடுகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். திருவண்ணாமலை, சென்னை, ஆத்தூர், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதியில் இருந்தும், கர்நாடகா, கேரளா, மகராஷ்டிரா, கோவா மாநில வியாபாரிகள் அதிகளவில் வந்திருந்தனர். தெலுங்கானா பிரச்னையால், ஆந்திராவில் தினமும் பந்த் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்கள் நடந்து வருகிறது. இதனால், அம்மாநில வியாபாரிகள் வரவில்லை. கடந்த சில நாட்களாகவே தொடரும் மழை காரணமாக, நேற்று சந்தைக்கு பசுக்கள், 400, எருமை, 300 மட்டுமே விற்பனைக்கு வந்தன. பசுக்கள், 18 ஆயிரம் முதல், 33 ஆயிரம் ரூபாய் வரையிலும், எருமைகள், 17 ஆயிரம் முதல், 31 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. கர்நாடகா, கேரளா, மகராஷ்டிரா, கோவா மாநிலங்களில் பெய்த மழையால், மேய்ச்சல் நிலப்பரப்பு அதிகரித்துள்ளது. அம்மாநிலங்களில் மாடு வளர்ப்புக்கு ஏற்ற சூழல் நிலவுகிறது. அம்மாநில வியாபாரிகள், இடைத்தரகர்கள் அதிகளவில் மாடுகளை வாங்கி சென்றனர். ஆந்திர மாநில வியாபாரிகள் வராததால், விலை எதிர்பார்த்த அளவு அதிகரிக்கவில்லை. தமிழகத்திலும் ஆங்காங்கே மழை பெய்து வருவதால், கால்நடை வளர்ப்போர், மாடுகளை விற்பது குறித்து தயக்கம் காட்டுகின்றனர். மேலும் எதிர்பார்த்த விலை கிடைக்காததால், கால்நடைகளை விற்க தயக்கம் காட்டி வருகின்றனர். வறட்சி நீங்கி வருவதால், கால்நடைகளை வளர்ப்பு மீண்டும் சூடுபிடிக்க துவங்கி உள்ளது. விலையும், மாடுகள் வருகையும் கடந்த வாரத்தை ஒத்தே, இந்த வாரமும் இருந்தது. வரும் வாரங்களில் வரத்து குறைந்து, விலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### மானியத்துடன் பயிர் காப்பீடு செய்யலாம் :விவசாயிகளுக்கு கரூர் கலெக்டர் அழைப்பு

கரூர்: "மானியத்துடன் கூடிய பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம்' என, கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி கூறினார்.அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:விவசாயத்தில் நவீன தொழில் நுட்பங்கள், அதிக விலையுள்ள இடுபொருட்கள் உபயோகப்படுத்தல், பண்ணை வருமானத்தை நிலைப் படுத்துதல், உணவு மற்றும் எண்ணெய்வித்து பயிர்களின் உற்பத்தியை பெருக்குதல் போன்றவற்றிக்கு ஊக்கமளிக்கும் வகையில் பல்வேறு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இதைபோல புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்ற பாதிப்பு ஏற்படும் போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிருக்கு சேதம் ஏற்படும் விவசாயிகளுக் காப்பீடு மூலம் நிதி உதவி அளிக்கப்படுகிறது.காப்பீடு செய்யப்படும் பயிர்களை சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் இத்திட்டத்தில் சேரலாம். பயிர்கடன் பெறுபவர்கள் கட்டாயத்தின் அடிப்படையில், பயிர்க்கடன் பெறாதவர்கள் விருப்பத்தின் அடிப்படையில் சேரலாம். உத்தரவாத மகசூலின் மதிப்பீடு வரை காப்பீடு செய்துகொள்ளலாம். விவசாயிகள் தங்கள் விருப்பத்தின்பேரிலும், கூடுதலாக காப்பீட்டுத் தொகை செலுத்தி சராசரி மகசூலின், 150சதவீத மதிப்பு வரை காப்பீடு செய்து கொள்ளலாம். பயிர்க்கடன் வாங்கும் விவசாயிகள் தாங்கள் கடன் அளிக்கும் வங்கியிலேயே கட்டாயமாக பயிர் காப்பீடு செய்யப்படுகிறது. பயிர்க்கடன் வாங்காத ஏனைய விவசாயிகள் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் அல்லது பொதுத்துறை வங்கிகளில் தாங்கள் விருப்பத்தின்பேரில் காப்பீடு செய்து கொள்ளலாம். பயிர்வாரியாக ஏக்கருக்கு செலுத்த வேண்டிய பிரிமியத் தொகை: நெல் சம்பா சகுபடியில், 12ஆயிரத்து,944 ரூபாய் காப்பீட்டுத்தொகையில், இரண்டு சதவீதம் பிரிமியம் தொகை செலுத்த வேண்டும். இதன்படி, 259 ரூபாய் பிரிமியம் தொகையில், மான்யம் கழித்து பெறுவோர் செலுத்தவேண்டிய பிரிமியத்தொகை 129, ரூபாய், கடன்பெறா விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியத்தொகை 116 ரூபாயாகும். கம்பு காப்பீடு 4,244 ரூபாயில், சதவீதம் 3.50 சதவீதம் பிரியம் அளிக்க வேண்டும். இதில் மொத்த பிரிமியம் 149 ரூபாயில், மானியம் போக கடன்பெறுவோருக்கு 74 ரூபாய். கடன்பெறாதோர், 67 ரூபாய் கட்ட வேண்டும். சோளம் காப்பீட்டுதொகை, 3,080 ரூபாய்க்கு, 77 ரூபாய் பிரியம் தொகை செலுத்த வேண்டும். இதில் மானியம்போக கடன்பெறுவோருக்கு, 39 ரூபாய். கடன்பெறாதோருக்கு, 35 ரூபாயாகும். மக்காச்சோளம் காப்பீட்டு தொகை, 10 ஆயிரத்து,284 ரூபாயில், மொத்தம் பிரியம் தொகை, 257 ரூபாயாக உள்ளது. இதன்படி

மானியம்பெறுவோருக்கு, 129 ரூபாய், கடன்பெறாதோருக்கு,,116 ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நிலக்கடலை காப்பீட்டுத்தொகை, 15ஆயிரத்து 380 ரூபாயில், மொத்த பிரிமியம், 538 ரூபாய் கொடுக்க வேண்டும். இதில், மானியம் கழித்து கடன்பெறுவோர், 269 ரூபாய், கடன்பெறாதோர், 242 ரூபாயாகும். எள் காப்பீட்டுத்தொகை, 4,520 ரூபாய், மொத்தம் பிரியம் தொகையில், 158 ரூபாய் கடன்பெறுவோர், 79 ரூபாயும், கடன் பெறாதோர், 71 ரூபாய் செலுத்த வேண்டும். சூரியகாந்தி காப்பீட்டுத் தொகை, 17,080 ரூபாயில், மொத்தம் பிரிமியம், 598 ரூபாயில், கடன் பெறுவோர், 299 ரூபாய், பெறாதோர், 269 ரூபாயாகும். மஞ்சள் காப்பீட்டுதொகை, 1லட்சத்து,41ஆயிரத்து,852 ரூபாயில் மொத்தம் பிரிமியம் தொகை, 13ஆயிரத்து,618 ரூபாயில், கடன் பெறுவோர், 6,809 ரூபாய், கடன் பெறாதோர், 6,128 ரூபாயகும். வாழை காப்பீட்டுதொகை, 2லட்சத்து,22ஆயிரத்து,512 ரூபாயில் மொத்தம் பிரியம் தொகை 17ஆயிரத்து,356 ரூபாயில் கடன்பெறுவோர், 8,678 ரூபாய், கடன் பெறாதோர், 7,810 ரூபாய் செலுத்த வேண்டும். பிர்க்கா அளவில் அறிவிக்கை செய்யப்பட்ட கிராமங்கள் மற்றும் பயிர்கள் வட்டார அளவில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள பயிர்கள் விபரங்களை தங்கள் பகுதியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி தெரிந்துகொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### வாழைக்காய் வியாபாரம் அதிகரிப்பு: சந்தையில் குவியும் வியாபாரிகள்

நாகர்கோவில் : ஓணப்பண்டிகையை யொட்டி அப்டா மார்கெட்டில் வாழைதார் வாங்க கேரளவியாபாரிகள் குவிந்தனர். விலை ஏற்றத்துடன் வாழைத்தார்கள் விற்பனையானது. குமரி மாவட்டத்தில் நாகர்கோவிலில் மிகபெரிய மார்க்கெட்டான அப்டா மார்க்கெட் உள்ளது. இங்கு தினமும் காய்கறிகள், பழங்கள், வாழைத்தார்கள் என விற்பனை செய்யப்படுகின்றன. இதில் அதிக அளவிலான காய்கறிகள், வாழைத்தார்கள் கேரளாவிற்கு கொண்டு செல்லப்படுகிறது. தற்போது ஒணம் சீசன் களைகட்டியுள்ளதால் தினமும் கேரள வியாபாரிகள் இங்கு வந்து குவிந்த வண்ணம் உள்ளனர். மாவட்டத்தில் உற்பத்தி செய்யும் காய்கறிகள், வாழைபழங்கள், வாழைத்தார்கள் ஆகியவற்றை மார்க்கெட்டிற்கு கொண்டு வருகின்றனர். வியாபாரிகள் அவற்றை வாங்கி நாகர்கோவில், களியக்காவிளை, மார்த்தாண்டம் மற்றும் கேரளம் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் கொண்டு செல்கின்றனர். சாதாரண காலங்களில் இந்த அப்டா மார்க்கெட்டில் இருந்து ஒரு கோடி ரூபாய் அளவில் வியாபாரம் நடந்து வருகிறது. சீசன்

காலங்களில் ஒன்றேகால் கோடி ரூபாய் அளவில் விற்பனை நடந்து வருகிறது. ஓணம் பண்டிகைக்கு ஒரு சில நாட்களே உள்ள நிலையில் கேரள வியாபாரிகள் இங்கு வந்து முகாமிட்டு உள்ளனர். இந்த ஏற்றுமதி மூலம் வியாபாரிகளுக்கு பெருமளவு வருவாய் கிடைத்து வருகிறது. இந்நிலையில் தற்போது முகூர்த்த மாதம் என்பதால் உள்ளூரிலேயே வாழைத்தாரின் தேவை அதிகமாக இருக்கும். ஓணம் கொண்டாடட்டம் துவங்கியுள்ளதாலும், திருமண விஷேசம் நடப்பதாலும், வாழைத்தார் விற்பனை அதிகரித்துள்ளது.

## பலத்த மழை காரணமாக பூண்டி ஏரிக்கு நீர் வரத்து அதிகரிப்பு



திருவள்ளூர்

பலத்த மழை காரணமாக பூண்டி ஏரிக்கு நீர் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் பூண்டி ஏரியின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

கிருஷ்ணா நதிநீர்

கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தின்படி, கடந்த ஜூன் மாதம் 16–ந்தேதி முதல் ஆந்திர மாநிலம் நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. மழை பொய்த்து போனதால் கண்டலேறு அணையின் நீர் மட்டம் குறைந்து கொண்டே வந்தது. இதனால் கண்டலேறு அணையில்

இருந்து சுமார் 120 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சோமசிலா அணையில் இருந்து கண்டலேறு அணைக்கு தண்ணீர் திறந்து விட்டனர். அதன்படி கடந்த 6–ந்தேதி முதல் விநாடிக்கு 2 ஆயிரம் கன அடிவீதம் கண்டலேறு அணைக்கு தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது.

<u>நீர்வரத்து அதிகரிப்பு</u>

இந்தநிலையில் ஆந்திர பிரதேச மாநிலத்தை ஒட்டிய வங்காள விரிகுடாவில் உருவாகி உள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக தமிழ்நாட்டின் வட பகுதிகள் மற்றும் ஆந்திராவில் கடந்த 3 நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் பூண்டி ஏரிக்கு கிருஷ்ணா நீர் வரத்து அதிகரித்து உள்ளது.

மேலும் பூண்டி ஏரியின் நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்யும் பலத்த மழை காரணமாகவும் பூண்டி ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளது. நேற்று மதியம் நிலவரப்படி கண்டலேறு அணையில் இருந்து விநாடிக்கு 180 கனஅடியும், மழை நீர் விநாடிக்கு 524 கனஅடி வீதமும் ஆக மொத்தம் 704 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டு இருந்தது.

<u>நீர் மட்டம் உயர்வு</u>

நீர் வரத்து அதிகரிப்பு காரணமாக பூண்டி ஏரியின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. பூண்டி ஏரியின் உயரம் 35 அடி. நேற்று மதியம் 1 மணி நிலவரப்படி ஏரியில் 21.10 அடி நீர் மட்டம் பதிவானது. 357 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது. பூண்டி ஏரியில் இருந்து புழல் ஏரிக்கு விநாடிக்கு 321 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

தொடர்ந்து பலத்த மழை பெய்தால் பூண்டி ஏரிக்கு மேலும் கூடுதல் தண்ணீர் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

## முட்டை விலை 10 காசுகள் சரிவு 330 காசுகளாக நிர்ணயம்



நாமக்கல்,

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல்விலை நேற்று ஒரே நாளில் 10 காசுகள் சரிவடைந்து 330 காசுகளாக குறைந்து உள்ளது.

முட்டை விலை சரிவு

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 340 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் இன்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை 10 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 330 காசுகளாக சரிவடைந்து உள்ளது.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:–

சென்னை–343, ஐதராபாத்–306, விஜயவாடா, தனுகு–317, பார்வாலா–309, மும்பை–338, மைசூர்–327, பெங்களூர்–325, கொல்கத்தா–348, டெல்லி–328.

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு தமிழகம் மற்றும் வடமாநிலங்களில் முட்டை விற்பனை கடுமையாக சரிவடைந்து உள்ளது. இதுவே விலை குறைப்புக்கு காரணம் என பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

முட்டைக்கோழி கிலோ ரூ.60–க்கும், கறிக்கோழி கிலோ ரூ.65–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை.

## கோபி பகுதியில் தொடர் மழை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு கொப்பரை தேங்காய் வரத்து குறைந்தது

கோபிசெட்டிபாளையம்,

கோபியில் தொடர் மழையின் காரணமாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு கொப்பரை தேங்காய் வரத்து குறைந்தது.

கொப்பரை தேங்காய் உற்பத்தி

கோபிசெட்டிபாளையம், குள்ளம்பாளையம், கலிங்கியம், செம்மாண்டம்பாளையம், கொளப்பலூர், சிறுவலூர், வெள்ளாங்கோவில், காசிபாளையம், அரசூர், கடத்தூர், கள்ளிப்பட்டி, கூகலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கொப்பரை தேங்காய் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்த பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் கொப்பரை தேங்காய்கள் கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றன. இந்தநிலையில்

கடந்த சில நாட்களாக கோபி பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் கொப்பரை தேங்காயை காய வைக்க முடியாமல் உற்பத்தியாளர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர்.

ரூ.10 லட்சத்துக்கு ஏலம்

கோபி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நேற்று கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்திற்கு கோபி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த 73 விவசாயிகள் மொத்தம் 364 மூட்டைகள் கொப்பரை தேங்காயை விற்பனைக்காக கொண்டு வந்தனர்.

இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 5 ஆயிரத்து 283 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 5 ஆயிரத்து 633 ரூபாய்க்கும் விலை போனது. சராசரி விலையாக 5 ஆயிரத்து 529 ரூபாய்க்கும் விலை போனது. இவை மொத்தம் ரூ.10 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டன.

வரத்து குறைந்தது

கோபிசெட்டிபாளையம், சிறுவலூர், திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி, காங்கயம், வெள்ளக்கோவில், கோவை மாவட்டம் பொள்ளாச்சி ஆகிய பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் கொப்பரை தேங்காய்களை வாங்கிச் சென்றனர். தொடர் மழை காரணமாக உற்பத்தி குறைந்ததால் கோபி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு குறைந்த அளவிலான கொப்பரை தேங்காய்களே விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு இருந்தன.

கடந்த வாரத்தை காட்டிலும் நேற்று 154 மூட்டைகள் கொப்பரை தேங்காய் குறைவாக விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு இருந்தன. இதனால், வெளியூர்களை சேர்ந்த வியாபாரிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

## அமராவதி அணையில் இருந்து 48 ஆயிரம் ஏக்கரில் நெல்நடவு செய்ய இன்று தண்ணீர் திறப்பு



தாராபுரம்,

அமராவதி அணையில் இருந்து நாளை (வெள்ளிக்கிழமை) பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. இதன் மூலம் திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் 48 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் நெல்நடவு பணி தொடங்கும்.

**<u>அமராவதி அணை</u>**

திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே உள்ள அமராவதி அணை மூலம் அமராவதி பழைய ஆயக்கட்டு வாய்க்கால் பாசனம் மூலம் 21 ஆயிரத்து 867 ஏக்கரும், புதிய ஆயக்கட்டு பாசன வாய்க்கால் மூலம் 25 ஆயிரத்து 250 ஏக்கரும் ஆக மொத்தம் 47 ஆயிரத்து 147 ஏக்கர் நிலங்கள் பாசன வசதியை பெற்றுள்ளன. திருப்பூர் மற்றும் கரூர் மாவட்டங்களை உள்ளடக்கிய இந்த பாசன நிலங்களில் நெல் சாகுபடி செய்ய அமராவதி அணையில் இருந்து இன்று (வெள்ளிக்கிழமை) தண்ணீர் திறக்கப்படுகிறது.

**<u>சுழற்சி முறை</u>**

அதன்படி புதிய ஆயக்கட்டு பாசன வாய்க்காலுக்கு 440 கன அடி தண்ணீர் திறக்கப்பட உள்ளது. பழைய ஆயக்கட்டு வாய்க்காலில் 1000 கன தண்ணீர் முதலில் திறக்கப்படுகிறது. இந்த தண்ணீர் கரூர் மாவட்ட எல்லையை சென்றடைந்த பிறகு குறைக்கப்படும். மொத்தம் 4½ மாதங்கள் சுழற்சி முறையில் தண்ணீர் வழங்கங்கவும், அறுவடை வரை மொத்தம் 8112.96 மில்லியன் கன அடி தண்ணீர் திறக்கவும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். நேற்று காலை நிலரப்படி அமராவதி அணையின் அணையின் நீர்மட்டம் 87.44 அடி (மொத்த உயரம் 90 அடி). அணைக்கு 404 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையின் மொத்த கொள்ளளவு 3814.0 எம்.எல்.டி. ஆகும்.

**மகிழ்ச்சி**

பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படுவதை முன்னிட்டு விவசாயிகள் சந்தோஷம் அடைந்து விவசாய பணிகளில் ஈடுபட தொடங்கி விட்டனர். எனவே இந்த ஆண்டு நெல் விளைச்சல் அமோகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வயலாமூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு நேரடி நெல் விதைப்பு குறித்து கூட்டம்



சிதம்பரம்,

பரங்கிப்பேட்டை வட்டாரத்தில் வயலாமூர் கிராமத்தில் சம்பா நெல் நேரடி விதைப்பு, வயல்களில் களைக்கொல்லி மூலம் களைக்கட்டுப்பாடு குறித்த விழிப்புணர்வு கூட்டமும், செயல்விளக்கமும் நடைபெற்றது. கூட்டத்துக்கு கடலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். வேளாண் துணை இயக்குநர் சந்திரமோகன், வேளாண்மை உதவி இயக்குநர் ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டு நேரடி நெல் விதைப்பு, களைக்கட்டுப்பாடு குறித்து பேசினார்கள்.

பரங்கிப்பேட்டை வட்டார துணை வேளாண்மை அலுவலர் திருஞானம், உதவி வேளாண்மை அலுவலர்கள் சின்னமணி, ராஜா, பிரான்சிஸ் ஆகியோர் வயலாமூர்

கிராமத்தை சேர்ந்த விவசாயி குழந்தைவேல் என்பவரின் நிலத்தில் இருந்து விவசாயிகளுக்கு களைக்கட்டுப்பாடு குறித்த செயல்விளக்கம் அளித்தனர்.

## மழையினை பயன்படுத்தி விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் வேளாண் இயக்குனர் ஆலோசனை



புதுக்கோட்டை,

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது பெய்துவரும் மழையினை பயன்படுத்தி விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய வேளாண் பணிகள் குறித்து புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான் ஆலோசனைகள் வழங்கியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

<u>நாற்றங்கால் அமைக்கும் பணி</u>

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் தென்மேற்கு பருவ மழையினை பயன்படுத்தி விவசாயிகள் சம்பா நாற்றங்கால் அமைக்கும் பணிகளை மேற்கொள்ளலாம்.

ஒரு ஏக்கர் நடவு செய்ய 8 சென்ட் நாற்றங்கால் போதுமானது. திருந்திய நெல் சாகுபடிக்கு ஒரு ஏக்கர் நடவு செய்ய 1 சென்ட் நாற்றங்கால் போதுமானது.

சம்பா நாற்றங்கால் அமைக்கும் பணியோடு சம்பா நெல் சாகுபடி செய்யவுள்ள நடவு வயலையும் உழவு செய்து பசுந்தாள் உரப்பயிரான சணப்பு போன்றவற்றை ஏக்கருக்கு 10 கிலோ என்ற அளவில் விதைப்பு செய்யலாம். இப்பயிரை 25–30 நாட்களில் அதாவது பூ பூப்பதற்கு முன் மடக்கி உழவு செய்ய வேண்டும்.

<u>நேரடி விதைப்பு</u>

சம்பா நெல் நேரடி விதைப்பு செய்யும் விவசாயிகள், மழை ஈரத்தை பயன்படுத்தி ஏற்கனவே உழவு செய்து வயலை தயாராக வைத்துள்ள விவசாயிகள் ஒரு உழவு செய்து நேரடி விதைப்பு மேற்கொள்ளலாம். வயலில் தண்ணீர் தேங்கி உள்ளபோதோ, ஈரம் அதிகமாக இருக்கும்போதோ நேரடி விதைப்பு செய்வதை தவிர்க்க வேண்டும்.

ஏற்கனவே, நேரடி நெல் விதைப்பு செய்துள்ள விவசாயிகள் விதைப்பு செய்து 3 முதல் 5 நாட்களுக்குள் களைகள் முளைக்கும் முன்பு தெளிக்கும் களைக்கொல்லியான பென்டிமெத்தலின் ஏக்கருக்கு 1 லிட்டர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும். வயலில் ஈரம் அதிகமாக இருக்கும்பட்சத்தில் களைக்கொல்லியினை 20 கிலோ மணலுடன் கலந்து சீராக தூவவும்.

<u>செழித்து வளரும்</u>

ஏற்கனவே விதைத்து 15–20 நாட்களில் களைகள் முளைத்திருந்தால் களைகள் முளைத்தப்பின் அடிக்கும் களைக்கொல்லியினை பிஸ்பைரிபாக் சோடியம் 10 எஸ்.சி மருந்தினை ஏக்கருக்கு 100–120 மில்லியை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளித்து புல், கோரை மற்றும் அகன்ற இலை களைகளைக் கட்டுப்படுத்தலாம்.

ஏற்கனவே நேரடி நெல் விதைப்பு செய்துள்ள விவசாயிகள் விதைப்பு செய்து 15 நாட்கள் கழித்து களைத்துவிட வேண்டும். இவ்வாறு களைத்து விடுவதால் பயிருக்கு காற்றோட்டம் அதிகரித்து பயிர் நன்கு செழித்து வளரும்.

நிலக்கடலை–தென்னை

மானாவாரி நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள், தற்போது பெய்துள்ள மழையினை பயன்படுத்தி இரண்டாவது களை எடுத்து ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட்டு நன்கு மண் அணைக்க வேண்டும். ஜிப்சம் இட்டு மண் அணைப்பதால் விழுதுகள்

எளிதில் இறங்கி நன்கு திரட்சியான அதிக அளவில் காய்கள் பிடிக்கும். தற்போது பெய்துள்ள நல்ல மழையினால் சுருள் பூச்சி தாக்குதல் பெருமளவு குறைந்து விடும்.

தென்னை சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் இந்த மழையினை பயன்படுத்தி தென்னங்கன்றுகள் நடும் பணிகளை மேற்கொள்ளலாம். ஏற்கனவே தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இந்த மழை ஈரத்தை பயன்படுத்தி மரங்களுக்கு உரமிடலாம். ஒரு மரத்திற்கு 1.3 கிலோ யூரியா, 2 கிலோ சூப்பர் பாஸ்பேட், 2 கிலோ பொட்டாஷ் உரங்களை வட்டபாத்தி அமைத்து இடலாம். மேலும் ஒரு மரத்திற்கு ஒரு கிலோ தென்னை நுண்சத்து இடலாம். இதனால் குரும்பைகள் கொட்டுதல் குறைந்து காய்கள் அதிகம் பிடிக்கும்.

பயறுவகை பயிர்கள்

பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், இம்மழையினை பயன்படுத்தி களைகளை எடுத்து பூக்கும் தருணத்தில் பயிர் இருந்தால் 2 சத டிஏபி கரைசல் இலைவழி மூலம் தெளிக்கவும். அதாவது ஒரு ஏக்கருக்கு 4 கிலோ டிஏபி உரத்தினை முதல் நாள் இரவே 10 லிட்டர் தண்ணீரில் ஊறவைத்து மறுநாள் கரைசலை வடிகட்டி தெளிந்த கரைசலுடன் தண்ணீர் சேர்த்து 200 லிட்டர் கரைசலாக்கி கைத்தெளிப்பான் கொண்டு இலைகள் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும். இதே கரைசலை மீன்டும் 15 நாட்கள் கழித்து மீண்டும் தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதால் பூக்கள் அதிகம் பிடிப்பதோடு பூக்கள் உதிர்வது கட்டுப்படுத்தப்பட்டு அதிக மகசூல் கிடைக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## ஓணம் பண்டிகையை முன்னிட்டு கேரள மாநிலத்திற்கு செல்லும் பூக்கள் விலை ‘கிடு,கிடு’ உயர்வு

தேனி,

கேரள மாநிலத்தில் வருகிற 16-ந் தேதி ஓணம் பண்டிகை கொண்டாடப்பட உள்ளதை முன்னிட்டு அருகில் உள்ள தேனி மாவட்டத் தில் இருந்து கேரள மாநிலத்திற்கு பூக்கள் அதிகளவில் கொண்டு செல்லப்படுகின்றன.

**ஓணம் பண்டிகை**

27 நட்சத்திரங்களில் திரு என்ற அடைமொழி பெற்றது திருவாதிரையும், திருவோண மும் தான். இதில் திருவாதிரை சிவபெருமானுக்கும், திருவோணம் பெருமாளுக்கும் உகந்தது என்று இந்துக்களால் நம்பப்படுகிறது. கேரள மாநிலத்தில் இந்த திருவோண நட்சத்திர

தினத்தில் மன்னர் மகாபலி தன்னுடைய நாட்டு மக்களை காண வருவதாக ஐதிகம் உள்ளது.

அவ்வாறு வரும் போது, அவரை வரவேற்கும் வகையில் இந்த நாளை ஓணம் பண்டிகை யாக மக்கள் கொண்டாடி மகிழ்கின்றனர். அந்த வகை யில் மகாபலி மன்னனை வர வேற்க கேரள மாநில மக்கள் வீதிகள் தோறும் தோரணங்கள் கட்டியும், அத்தப்பூ கோல மிட்டும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் ஓணம் பண்டிகையை கொண்டாடு கின்றனர்.

இந்த பண்டிகை நாளில் பல்வேறு மாறுவேடப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகளும் வழங்கப்படுகின் றன. மேலும் மகாபலி மன்னர் வேடமிட்டு வீதிகளில் வருவோர் மக்களை ஆசிர் வதிக்கும் நிகழ்ச்சி ஓணம் பண்டிகையின் சிறப்பாகும். இத்தகைய புகழ்மிக்க ஓணம் பண்டிகை இந்த ஆண்டு வருகிற 16-ந் தேதி (திங்கட் கிழமை) கொண்டா டப்பட உள்ளது.

**<u>பூக்கள் விலை உயர்வு</u>**

இதையொட்டி கேரள மாநிலத்தில் தற்போதே விழாவிற்கான ஏற்பாடுகள் களை கட்ட தொடங்கி உள் ளன. குறிப்பாக பண்டிகையின் முக்கிய நிகழ்வான அத்தப்பூ கோலமிட கேரள மாநிலத்தின் அருகில் உள்ள தமிழ்நாட்டின் எல்லை மாவட்டங்களில் இருந்து பூக்கள் விற்பனைக்காக கொண்டு செல்லப்படுவது தற்போது அதிகரித்து உள் ளது.

அந்த வகையில் தேனி மாவட்டத்தில் இருந்து கேரள மாநிலத்திற்கு பூக்கள் கொண்டு செல்வது நேற்று முதல் அதி கரிக்க தொடங்கி உள்ளது. ஏற்கனவே தமிழ்நாட்டில் திருமண முகூர்த் தங்கள் அதிகம் உள்ள நிலையில், கேரள மாநிலத்திலும் ஓணம் பண்டிகை வருவதால், பூக்களின் விலை இரு மடங்கு, மூன்று மடங்கு என்று அதிகரித்து உள்ளது.

குறிப்பாக கடந்த வாரம் ஒரு கிலோ முல்லைப்பூ ரூ.200-க்கு விற்கப் பட்ட நிலையில், ஓணம் பண்டிகை மற்றும் திருமண விழாக்கள் எதி ரொலியாக கிலோ ரூ.700-க்கு நேற்று விற்கப்படுகிறது. இதேபோன்று கடந்த வாரம் ரூ.140-க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ செவ்வந்தி பூ, தற்போது ரூ.300-ஆக விலை உயர்ந் துள்ளது.

மேலும் ஒருகிலோ வெள்ளை அரளிப்பூ ரூ.400-ஆகவும், வாடாமல்லி ரூ.150-ஆகவும் விலை உயர்ந்துள்ளது. இதுதவிர சம்மங்கி பூ கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.100-ஆக விற்கப்பட்ட நிலையில், தற்போது கிடு,கிடுவென விலை உயர்ந்து ரூ.800 வரை விற்பனையாகிறது. இதேபோன்று ஒரு கிலோ செண்டு பூ ரூ.40-ல் இருந்து ரூ.150-ஆக உயர்ந்துள்ளது.

தினகரன்

## பருவமழை தீவிரம் நெல் நாற்று நடும் பணி துவங்கியது

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் பருவமழை தீவிரமடைய தொடங்கியதை அடுத்து, நெல் நாற்று நடவு பணிகள் துவங்கியுள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் நெல், கரும்பு, மஞ்சள் ஆகியவை முக்கிய சாகுபடி பயிர்களாக உள்ளன. பெரும்பாலான விவசாயிகள் நெல் பயிர் செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டம் முழுவதும் 24 ஆயிரம் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டு வருகிறது. குறிப்பாக தர்மபுரி, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியங்களில் அதிகளவில் நெல் பயிரிடப்படுகிறது. கடந்த ஆண்டில் மழையின்றி ஏற்பட்ட வறட்சி காரணமாக, நெல் சாகுபடி முற்றிலும் பாதித்தது. இதனால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. நடப்பாண்டிலும், தென்மேற்கு பருவமழை போதிய அளவிற்கு பெய்யவில்லை. இதனால் ஏமாற்றமடைந்திருந்த விவசாயிகள், வடகிழக்கு பருவமழையை பெரிதும் எதிர்பார்த்து காத்திருந்தனர். இந்நிலையில் தர்மபு£¤ மாவட்டத்தில், கடந்த 10 நாட்களுக்கும் மேலாக பருவமழை தீவிரமாக பெய்து வருகிறது. இதனால் மாவட்டத்தில் உள்ள அணைகளில் நீர் வரத்து

அதிகரித்துள்ளது. மேலும், ஏரிகள் மற்றும் விவசாய கிணறுகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்து வருகிறது. இதையடுத்து நெல் நாற்று நடவு பணிகளில் விவசாயிகள் ஈடுபட தொடங்கியுள்ளனர். தர்மபுரிபென்னாகரம் சாலையில் அதகபாடி கிராமத்தில் நெல் நாற்று நடும் பணி தொடங்கியுள்ளது. வடகிழக்கு பருவமழை நீடிக்கும் பட்சத்தில், நடப்பாண்டு நெல் சாகுபடி அதிகரிக்க வாய்ப்புள்ளது என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

### தோட்டக்கலை பல்கலைக்கழகம் அமைக்க விவசாயிகள் வலியுறுத்தல்

தேனி, : தேனி மாவட்டத்தில் தோட்டக்கலை பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என தேனி மாவட்ட விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். தேனி மாவட்டம் விவசாயம் சார்ந்த பகுதியாகும். இங்கு நெல், கரும்பு, மா, தென்னை, வாழை, திராட்சை, கொடி முந்திரி, கொட்டை முந்திரி உள்ளிட்ட பல்வேறு பழங்கள், தானியங்கள் விவசாயம் நடக்கிறது. பணப்பயிர்களான மிளகு, ஏலம், கிராம்பு, மஞ்சள் விளைச்சலும், தேயிலை, காப்பி மற்றும் காய்கனிகளாள தக்காளி, மிளகாய், கத்தரிக்காய், வெங்காயம், காலிபிளவர், நூல்கோல் உள்ளிட்ட விளைச்சலும் தேனி மாவட்டத்தில் நடக்கிறது. இம்மாவட்டத்தில், மா 9 ஆயிரத்து 123 ஹெக்டேரிலும், தென்னை 18 ஆயிரத்து 173 ஹெக்டேரிலும், முந்திரி 5 ஆயிரத்து 913 ஹெக்டேரிலும், இலவ மரங்கள் 4 ஆயிரத்து 304 ஹெக்டேரிலும், காபி 3 ஆயிரத்து 666 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்படுகிறது. இது தவிர இதர காய்கறிகள் மற்றும் பழ வகைகள், பூக்கள் விளைவிக்கப்படுகின்றன. மூலிகைபயிர்கள், வாசனை பயிர்கள், நறுமணப்பயிர்கள், பூக்கள் மற்றும் காய்கறிகள் தேனி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. தேனி மாவட்டம் பெரியகுளத்தில் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பல ஆண்டுகாலமாக செயல்பட்டு வருகிறது. இது தவிர வைகை அணைப்பகுதியில், 50 ஏக்கர் நிலப்பரப்பில் தென்னை நாற்றுப்பண்ணையும், விதை நாற்றுப்பண்ணையும் செயல்பட்டு வருகிறது. விவசாயத்திற்கேற்ற நீர் வசதி மற்றும் பருவமழை காலநிலைகள் சீராக தேனி மாவட்டத்தில் உள்ளதால், விவசாயம் சிறப்பாக உள்ளது. தமிழக அரசு தோட்டக்கலை பல்கலைக் கழகத்தை தேனி மாவட்டத்தில் அமைக்க வேண்டும் என நீண்ட காலமாக விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.